ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1824/2 - 2013 අගෝස්තු මස 19 වැනි සඳුදා - 2013.08.19

*1824/2 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இலக்கம் : 3/1/ 3/1.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல. : LD/05/2009/WS/187.

பொதுமக்களின் தேவைக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியிருப்பதால் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவில், ஹேவாசிஸ்ஸ கோரளையின் சிறு பிரிவில், உனுவின்ன என்ற கிராமத்திலமைந்த, நில அளவை மாஅதிபரால் அளந்து, 2013.06.27 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட மஹ 6275 ஆம் இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 'மாகஹயாய' என்னும் காணியில் சுமார் 0.0506 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு.

**காணித்துண்டு இலக்கம் : 1**

காணியின் பெயர் : 'மாகஹயாய' ;
காணியின் விஸ்தீரணம் : 0.0506 ஹெக்டயார்.

வடக்கு: கண்டி கிறிஸ்தவ பாதிரியார் உரிமைகோரும் சாந்த மரியா தேவாலயக் காணி;

கிழக்கு: கண்டி கிறிஸ்தவ பாதிரியார் உரிமைகோரும் சாந்த மரியா தேவாலயக் காணி மற்றும் ஏ. எம். ஜயதிலக உரிமைகோரும் மாகாஹயாய;

தெற்கு: ஏ. எம். ஜயதிலக உரிமைகோரும் மாகஹயாய மற்றும் கண்டி கிறிஸ்தவ பாதிரியார் உரிமைகோரும் சாந்த மரியா தேவாலயக் காணி;

மேற்கு: கண்டி கிறிஸ்தவ பாதிரியார் உரிமைகோரும் சாந்த மரியா தேவாலயக் காணி.

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும்:

1. கண்டி ஆயர் அதி வண. பிதா,
   இல. 873, பேராதெனிய வீதி,
   கண்டி.

2. ஏ. எம். ஜயதிலக அவர்கள்,
   கந்தஹந்தி,
   உனுவின்ன.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேற்குறித்த காணிக்கு உரிமைகோருபவரோ அல்லது வேறு தொடர்புகள் இருப்பதாக கூறும் சகலரும் தாமாகவோ அல்லது அவர்களின் கடிதம் மூலம் அதிகாரம் உள்ளவர்களாகவோ இருப்பின் 2013, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னைச் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும், 2013, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் அக்காணியையோ அல்லது அக்காணியுடன் தொடர்புடைய தத்தமது உரிமைகளின் தன்மைகளையும் அக்காணியை எடுத்துக் கொள்ளுதலுக்கான நட்டஈடு கோருவதற்குரிய காரணங்கள் பற்றிய விபரங்களையும் நட்டஈட்டுத்தொகை, அத்தொகையை கணக்கீடு செய்த முறையையும் கடிதமூலம் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்க வேண்டும். அவற்றை உரிமைகள் கோரல் பற்றிய ஒப்பனை பரிசீலனை செய்யும்போது சமர்ப்பிக்க வேண்டும்.

மதுபானி பியசேன,
பிரதேச செயலாளர்,
பாத்த ஹேவாஹெட்ட.

பிரதேச செயலகம்,
பாத்தஹேவாஹெட்ட,
தலாத்துஓய.

9 - 14

---

**திருத்திய பத்திரம்**

காணி அமைச்சின் இலக்கம்: 4/3/8/2011/PC/308.
தொடர்பு இலக்கம்: துபிசெ/கையேற்றல் 3/1/75.

2013, யூன் மாதம் 20 ஆந் திகதிய 1815/13 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட துண்டு இலக்கம் 02 இன் அளவு கீழ் குறிப்பிடப்பட்டபடி திருத்தம் செய்யப்பட்டதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

அளவு: 3.9102 ஹெக்டயார் ஆகவும் இங்கே அறிவிக்கின்றேன்.

எல். ஏ. களுகப்புஆராச்சி,
பிரதேச செயலாளர் மற்றும் காணி கையேற்கும் அதிகாரி,
கெஸ்பேவ.

பிரதேச செயலகம்,
கெஸ்பேவ,
2013, ஓகத்து 15.

09-15

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.